# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3 : 16

மரம் 6. மார்ச் 1998. கனி 8

ஆசிரியர்
**B. அர்ஜூனன்**

# ஆசிரியர் கடிதம்

வாசகர்களுக்கு,

சர்வலோகத்திற்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கடிதத்தின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

அநேகர் அதிகமான பிரதிகள் கேட்டு எழுதுகிறீர்கள். நீங்கள் யாருக்கு பிரதியை கொடுக்க விரும்புகிறீர்களோ அவர்களது முழு முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறோம். உங்கள் நண்பர்கள் இந்தியாவில் எத்திக்கிலிருந்தாலும் அவர்களுக்கு எங்களது "கிறிஸ்துவின் வசனம்" மாத இதழை நிச்சயமாக அனுப்பி வைப்போம். ஒவ்வொருவரும் இவ்விதழ் மூலம் சத்தியத்தை அறிந்துகொண்டு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக வேண்டுமென்பதே எங்களது குறிக்கோள்.

கடந்த மாதம் 4ஆம் தேதி நானும், என் மனைவியும் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்ததில் எனது வலது கை எலும்பு முறிந்து தற்போது கர்த்தருடைய கிருபையால் சுகமடைந்து வருகிறேன். எனவே கடந்த மாத இதழை உங்களுக்கு அனுப்ப தாமதமாகிவிட்டது. எங்களோடு கடிதத் தொடர்பு கொள்ளுகிறவர்கள் உங்களது Ref. No. ஐயும் குறிப்பிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடுங்கூட இருப்பதாக! ஆமென்.

ஆசிரியர்.

## தேவனுடைய பார்வையில் பெருமையும், தாழ்மையும்

- பெருமையையும்,அகந்தையையும்... நான் வெறுக்கிறேன். நீதி. 8 : 13
- தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். யாக். 4 : 6
- வெறியரின் பெருமையான கிரீடத்துக்கு ஐயோ ஏசா. 28 : 1
- தன்னைத் தாழத்துகிறவன் உயர்த்தப்படுவான் லூக். 18 : 14
- தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் யாக். 4 : 6
- கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார். சங். 138 : 6

Published by,

*The World Literature Publication*

Post Box No. 5,

BATLAGUNDU - 624202.

S. INDIA.

# கிறிஸ்துவின் வசனம்
# Word of Christ

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 | மார்ச் 1998 | கனி 8


## சோதனை - Temptation

ஆசிரியவுரை

சோதனை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் வரக்கூடிய ஒன்றுதான். சோதனைகள் வரும்போது அவைகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து பரிசுத்த வேதாகமத்தில் நாம் காணலாம். சோதனைகளை ஜெயிக்க ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் பிசாசு சோதித்தான். அவனைத் தம்முடைய வாயின் வார்த்தையினாலே ஜெயித்தார்.

பரிசுத்த வேதாகமத்தில் நாம் இப்படியாக வாசிக்கிறோம். "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக் கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிற தற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்'' 1 கொரி. 10 : 13. எல்லா மனுஷருக்கும் வரக்கூடிய சோதனைதான் ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் வருகிறது. இந்த விஷயத்தில் தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். உங்கள் திராணிக்கு மிஞ்சி நீங்கள் சோதிக்கப்பட அவர் இடம் கொடாமல் அதை தாங்கத் தக்கதாகவும் அதோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான வழியையும் உண்டாக்குகிறார். ஆம், பிரியமானவர்களே நம்முடைய தேவனாகிய கர்த்தர் சோதனைகளிலும் நமக்கு எவ்வளவு அதிகமாக உதவி செய்யக்கூடியவராய் இருக்கிறார் என்று இவ்வசனத்தின் மூலமாக தெரிந்துகொள்கிறோம்.

சிலர் சோதனையே வரக்கூடாது என்று நினைக்கின்றனர். பவுலை பாருங்கள், கிறிஸ்துவினிமித்தமாக எவ்வளவோ சோதனைகளைச் சகித்தான், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டான், யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிப்பட்டான், மூன்று தரம் மிலாறுகளால்

அடிபட்டான், ஒருதரம் கல்லெறியுண்டான், மூன்று தரம் கப்பற் சேதத்தில் இருந்தான்... இப்படி இன்னும் எத்தனையோ சோதனைக்குள்ளாக்கப்பட்டான். மேலும் பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது "என் சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் அசட்டைபண்ணாமலும், அரோசியாமலும் தேவதூதனைப் போலவும், கிறிஸ்து ஏசுவைப் போலவும், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்" (கலா. 4:14) என்று எழுதுகிறார். யோபுவை போல சரீரத்தில் ஏற்பட்ட சோதனைகளையும் சகித்து இவன் தன் ஊழியத்தில் உற்சாகமாக இருந்ததை பார்க்கமுடிகிறது.

தேவன் என்னை சோதிக்கிறார் என்று அநேகர் சொல்லிக் கொள்வதுண்டு. ஆனால் யாக்கோபு ஆசிரியர் "சோதிக்கப்படுகிற எவனும், தான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" யாக். 1 : 13-15ல் இவ்வாறு கூறுகிறார். எந்த ஒரு தகப்பனும் தன் பிள்ளை கஷ்டப் படவேண்டு மென்றோ, வேதனைப்பட வேண்டுமென்றோ விரும்பமாட்டான். அப்படியிருக்கும்போது பரம தகப்பன் நம்மை சோதனைக்குள்ளாக்கி வேடிக்கைப் பார்க்க விரும்புவாரா?. ஒருவரும் கெட்டுப் போவதே அவருக்குச் சித்தமில்லாதிருக்கும் போது தேவன் சோதனைகளைக் கொடுப்பாரா?. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே சோதிக்கப்படுகிறான் எனக் காண்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கும்போது "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கிறார். மேலும் சீஷர்களைப் பார்த்து "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்" மாற். 14 : 38. ஜெபத்திலே உறுதியாக இருக்கும்போது சோதனைக்குட்பட மாட்டோம் என்று பார்க்கிறோம். அதற்கு மிஞ்சியும் சோதனைகள் வருமானால் நாம் சோர்ந்து போகாது ஜெபிக்க வேண்டும். பவுல் அவ்விதமாகவே அப். 20:19ல் "...எனக்கு நேரிட்ட சோதனைகளோடும் நான் கர்த்தரை சேவித்தேன்" என்கிறான்.

சோதனைகளைக் கொண்டு வருகிறவனை சோதனைக்காரன் என்று வேதாகமம் கூறுகிறது 1 தெச. 3:5. இவன் ஆண்டவராகிய இயேசுவை சோதிப்பதற்கு மூன்று வகையான தந்திரங்களோடு வந்தான் என்று மத். 4:3-10ல் வாசிக்கிறோம். அவனை இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தையினாலே ஜெயித்தார். இதைப்போல நம்முடைய வாழ்க்கையிலும் பிசாசு உலக ஆசா பாசங்களைக் காண்பித்து நம்மைசோதனைக்குட்படுத்தி அவன் வழிக்கு இழுக்கப் பார்க்கிறான். இவ்விதமாகவே

"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்" (தீமோ. 6:9). தேமா என்பவனும்கூட இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து பவுலை விட்டுப் பிரிந்து போனான் என்று 11 தீமோ. 4:10ல் வாசிக்கின்றோம். இப்படி அநேகர் பண ஆசையினாலே சோதனைக்குட்பட்டு இழுப்புண்டு போகிறார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசுவோ உலக இராஜ்யங்களை கொடுப்பேன் என்று கூறிய சாத்தானைப் பார்த்து "அப்பாலே போ சாத்தானே" என்றார்.

சோதனைகளை சகிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்" (யாக். 1:12). "கர்த்தர் தேவ பக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" (11 பேது 2:9). தேவன் பக்தியுள்ளவனை சோதனையிலிருந்து காக்க வல்லவர். மேலும் "சோதனை காலத்திற்குத் தப்பும்படிநானும் உன்னைக் காப்பேன்" என்று வெளி. 3:10ல் இயேசு கூறுகிறார். இப்படிப்பட்ட வார்த்தைகள் சோதனை காலங்களில் நமக்கு பெலனைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. சிமிர்னா சபைக்கு எழுதும்போது "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரை காவலில் போடுவான்" (வெளி. 2:10) என்கிறார். இப்படிப்பட்ட சோதனைகளை பிசாசானவன் நம் வாழ்க்கையில் கொண்டு வரும் போது இவைகளைச் சகித்து கிறிஸ்துவுக்காக நிலை நிற்கும் போது வாடாத ஜீவ கிரீடத்தைப் பெறுவோம்.

அருமையானவர்களே, தேவன் நம்மை எப்படி சோதனையிலிருந்து காக்கிறார் என்றும், நாம் சோதனைக் குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபிக்க வேண்டியது எவ்வளவு அவசியமாயிருக்கிறது என்பது குறித்தும், சோதனைகளோடு தேவனைப் பற்றிக் கொண்டவர்களைக் குறித்தும் பார்த்தோம். "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக். 1:2-3). கர்த்தர் தாமே உங்களை சோதனைகளினின்று காத்து இரட்சிப்பாராக! ஆமென்.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். யோவான் 16:38.

# கிறிஸ்தவம் உனக்கு என்ன செய்யக் கூடும்?

## What Christianity Can Do for you?

வேறு எதைக் காட்டிலும் கிறிஸ்தவமே இவ்வுலகத்திற்கு அதிகமாகச் செய்திருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளாதவர்களும் கூட, அதினுடைய தாக்கத்தினால் ஈர்க்கப்பட்டுள்ளனர். மனிதன் எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும், அதே போல அவன் நல்லவனாகவும் இருப்பது அவனில் அது ஏற்படுத்திய தாக்கத்தின் காரணத்தால்தான். மறு பக்கத்தில், கிறிஸ்தவம் உலகத்திற்கு அறிமுகப்படுத்தப் படாவிட்டால், உலகம் எவ்வாறு இருந்திருக்கக்கூடும் என்பதை சிறிது சிந்தித்துப்பாருங்கள். ஒருவேளை நாம் வாழ முடிந்திருந்தால் சந்தேகமின்றி வாழ்வதற்கே அது ஒரு பயங்கரமான இடமாக இருந்திருக்கும்.

பொதுவாக மனித குலத்திற்கு கிறிஸ்தவம் அதிகமாகச் செய்துள்ள போதிலும் இயற்கையில் இன்னும் தனி மனிதனைக் குறித்த காரியமாகத்தான் இருக்கிறது. எனவே, அதிலிருந்து மிக அதிகமான நன்மைகளை நாம் அடையவேண்டுமானால், அதை ஏற்றுக்கொள்ளத் தொடங்க வேண்டும். கிறிஸ்தவத்தின் தலைவரான இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி, அவருடைய உபதேசங்களுக்கு நாம் கீழ்படியும் போது மட்டுமே இதைச் செய்வது சாத்தியமாகக்கூடும். அவ்வாறு செய்யும்போது அதின் கொள்கைகள் நமது வாழ்வில் அங்கம் பெற்று, நாம் எவ்வளவு கனி கொடுக்க அவற்றை அனுமதிக்கிறோமோ, அவ்வளவு ஆசீர்வாதங்களை நாம் அடைகிறோம்.

கிறிஸ்தவத்தை மனதளவில் ஏற்றுக்கொண்டால் அல்லது ஏதாவது ஒரு மத அமைப்பில் தம்மை இணைத்துக் கொண்டால் அவர்கள் அளவற்ற ஆசீர்வாதங்களையும், பலன்களையும் பெறமுடியும் என்று சிலர் நம்ப வைக்கப்படுகின்றனர். தாங்கள் செல்வந்தர்களாகி விடுவதாகவும், தங்களுடைய சகல பிரச்சனைகளும் உடனே தீர்க்கப்படுவதாகவும், இதற்குப் பதிலாக தாங்கள் எதையும் செய்யத் தேவையில்லை என்பதாகவும் அவர்கள் தமக்குள்ளே கற்பனை செய்கின்றனர். ஆவிக்குரிய காரியங்களில் சிறிதும் அக்கறையில்லாமல், உலக ஆதாயங்களை மட்டுமே தேடுகிறவர்கள்தான் வழக்கமாக இவ்வகையான சிந்தனையில் மூழ்கிப் போகின்றனர். தங்களுடைய கனவுகள் நிறைவேறாமல் போகும்போது, இப்படிப்பட்டவர்களே எப்போதும் ஏமாந்து போகின்றனர். அதோடு வேறு திசைக்கு வெகு எளிதில் திரும்பி விடுகின்றனர்.

கிறிஸ்தவம் எளிமையானது. அதற்குரிய விலையைக் கொடுக்க விரும்புவோருக்கு அது பல நன்மைகளை வைத்துள்ளது. விசுவாசம், கீழ்படிதல், ஊழியம், பற்றுதல், நம்பிக்கை இவைகளே அந்த விலை. இதயப்பூர்வமாக அதை ஏற்றுக் கொண்டவர்கள் உலகக் காரியங்களிலும் ஆவிக்குரிய காரியங்களிலும் மென்மேலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றனர். இதே காரியத்தை அது உங்களுக்கும் செய்ய முடியும்.

1. உங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து கிறிஸ்தவம் உங்களுக்கு இரட்சிப்பை கொண்டு வர முடியும். தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளித்திடும் காரண கர்த்தாவாக கிறிஸ்து இருக்கிறார். (எபிரேயர் 5:9). ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு. 16:16.) என அவர் கூறினார். மனிதன் பாவியாக இருக்கிறான்; எனவே அவனுக்கு மன்னிப்புத் தேவை மனிதனுடைய விலையேறப் பெற்ற சொத்தாகிய ஆத்துமாவைக் கழுவி, சுத்தப்படுத்தும் இப்பணியை கிறிஸ்து மாத்திரமே செய்ய முடியும். (லூக்கா. 19:10, மத். 16:26).

2. தேவனுடைய பல வாக்குத்தத்தங்களோடு உங்களை கிறிஸ்தவம் தொடர்பு கொள்ளச் செய்கிறது. பரிசுத்த ஆவியானவரின் கனிகள் (அப். 2:38), சபையில் சேர்த்துக் கொள்ளுவது (அப் 2:47), கர்த்தரின் பிரசன்னம் (மத். 28:30), ஜெபம் செய்யும் சலுகை (யோவான். 9:31), நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கை (யோவான். 14:1-3) ஆகிய அனைத்தும் உள்ளன.

3. ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய ஆசீர்வாதங்களை கிறிஸ்துவம் அளிக்கிறது. கிறிஸ்து கற்பித்தார்: "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும்" (மத்தேயு 6:3). தேவனுடைய ராஜ்யம் அல்லது சபைக்கு முன்னுரிமை கொடுத்தால் மட்டுமே பிற காரியங்கள் கூட்டிக் கொடுக்கப்படும் என்பதைக் கவனியுங்கள். தாங்கள் ஏன் அதிகமாக ஆசீர்வதிக்கபடவில்லை என்று பல வேளைகளில் கிறிஸ்தவர்கள் வியப்படையக்கூடும்; ஆனால் கர்த்தரின் காரியத்தில் எவ்வளவு குறைவாக அவர்கள் செய்கிறார்கள் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திப்பதே இல்லை. மத்தேயு 5ஆம் அதிகாரத்தைப் படியுங்கள்.

4. நல்லதைச் செய்யும் சந்தர்ப்பங்களை கிறிஸ்தவம் நமக்கு அளிக்கிறது. "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலாத்தியர் 6:2). "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலா. 6:10).

5. எவ்வளவு அதிகமாக நாம் கொடுக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் பெற்றுக்கொள்வோம் என்பதை கிறிஸ்தவம் கற்பிக்கிறது. "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" (1 கொரி. 9:6) என பவுல் தமது கொரிந்து சபை சகோதரர்களை உற்சாகப்படுத்தினார். மீண்டுமாக, "...மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7). பலர் ஒருபோதும் பெறுவதில்லை. ஏனெனில், அவர்கள் ஒருபோதும் கொடுப்பதுமில்லை. பின், ஏன் கிடைக்கவில்லை என அவர்கள் வியப்பதுண்டு.

6. பெறுவதை விடக் கொடுப்பது மிக ஆசீர்வாதமானது என கிறிஸ்தவம் அறிவிக்கிறது. கிறிஸ்து தாமே இதை சொல்லியிருக்கிறார் (அப்.20:35). அவர் மேலும் கூறினார்: "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என் நிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான் (மத்தேயு. 10:39).

7. இவ்வுலகத்திலிருந்து வரப்போகும் உலகத்திற்கு ஒருவனை நடத்திச் செல்லும் ஒரு வாழ்க்கை முறையை கிறிஸ்தவம் ஒருவனுக்கு அளிக்கிறது. ஒருவன் உங்களுக்கு எப்படி செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் என இயேசு கற்பிக்கிறார். (லூக்கா 6:31). தனது எதிரியை மனிதன் நேசிக்க வேண்டுமென்று அவர் கூறினார் (மத்தேயு 5:44). தன்னைப் போல தனது அயலானையும் நேசிக்க வேண்டும் என்று சொன்னார் (மத்தேயு. 22:39). கிறிஸ்தவர்கள் உலகத்தை நேசிக்கலாகாது. (1 யோவான். 2:15). மாறாக ஒரு ஜீவனுள்ள பலியாக தன்னைத் தானே தேவனுக்கு அர்ப்பணித்து (ரோமர் 12:1), தன்னைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் (மத்தேயு. 5:8). நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையுடைய ஒரு சமாதானமான, மகிழ்ச்சி மிக்க நல்ல ஒரு வாழ்க்கை இதின் விளைவாக முடிவில் அமைகிறது. (கொலோ. 1:5). இதைவிட அதிகமாக ஒருவன் வேறு எதைக் கேட்கக் கூடும்?

எனவே, கிறிஸ்தவம் மிகவும் பலனளிப்பதாக இருக்கிறது. ஆனால் ஒருவன் அதற்காக எதைக் கொடுக்கிறானோ, அதற்கேற்பவே அவனுக்குக் கிடைக்கிறது. அதற்காக எதையும் நீங்கள் செய்யாவிட்டால், அதிகமாக எதையும் எதிர்பார்க்கலாகாது. ஆனால் உங்களை முழுவதுமாக தேவனுக்கு அர்பணித்து, அவருடைய கொள்கைகள் உங்களது வாழ்வில் கிரியை செய்ய அனுமதித்தால், கற்பனை செய்து பார்ப்பதற்கும் மேலாக நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

J. C. Choate தமிழில் எஸ். எஸ். ராஜன்

## பிப்ரவரி மாத இதழின் வேத அறிவுப்போட்டியின் வெற்றிபெற்றவர்கள்

1. J. மேரிஎலிசபெத் கலைவாணி - வத்தலக்குண்டு
2. S. ரேச்சல் அமுதமணி - மேல்விசாரம்
3. N. தானியேல்தமிழ்வாணன் - மேல்விசாரம்
4. P. இளங்கோவன் - செட்டிபாளையம்

## பிப்ரவரி மாத இதழின் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. அப்தோன் | நியா. 12:13, 14 | 6. ஒப்ரா |
| 2. குறுகினது | நீதி. 24:10 | 7. பெத்தானியா, லாசரு |
| 3. அநீதியுள்ளவனாயிருக்கிறான் | லூக் 16:10 | 8. செர்கியுபவுல் |
| 4. பவுலை, யூதர்கள் | அப். 18:12, 13 | 9. கிறிஸ்துவின் |
| 5. நியாயப் பிரமாணத்தின் | ரோம 13:10 | 10. கூடாது |

## இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசனஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடைமட்டும் எழுதி இம்மாதம் 25ஆம்தேதிக்குள் அனுப்பிவைக்கவும்.

1. நான் ஆதாமைப் போல என் மீறுதல்களை மூடி, என் அக்கிரமத்தை என் மடியிலே ஒழித்துவைத்தேனோ என்று கூறுவது யார்?
2. கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும், விருத்த சேதனமில்லாமையும் ஒன்றும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற எதுவே உதவும்?
3. மிலேத்துவில் பவுல் யாரை வியாதிப்பட்டவனாக விட்டு வந்தான்?
4. குருடனை வழிதப்பச் செய்கிறவன் எப்படிப்பட்டவன்?
5. சோதனை காலத்துக்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் என்று எந்த சபையைப் பார்த்து கர்த்தர் சொல்லுகிறார்?
6. கிறிஸ்து பிரதானஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமேஉயர்த்தினாரா?
7. ஞானம் தன்னை உடையவர்களுக்கு எதைத் தரும்?
8. உடன்படிக்கைப் பெட்டியின் மரம் எந்த மரத்தால் செய்யப்பட்டது?
9. நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் எதற்குட்பட்டிருக்கிறார்கள்?
10. அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன் யார்?

## பொட்டு வைத்துக் கொள்ளுதலும், மை இடுதலும்

E. A. ஆறுமுகம்

சமீப காலத்தில் கிறிஸ்தவ பெண்கள் பொட்டு வைத்துக் கொள்ளுதல், மை போட்டுக் கொள்ளுதல் போன்ற அனுசரிப்புகளை நியாயப்படுத்தி பேசப்படுகிறது. இது வருந்தத்தக்கது. நெற்றியிலே பொட்டு வைத்துக்கொள்ளுதலும், கண்களிலே மை தீட்டிக்கொள்ளுதலும் பெண்கள் செய்யும் பிற அலங்காரத்தைப் போன்றதுதான் என்கின்றனர். இவைகளை வேதம் தடைசெய்வதில்லையே என்றும் வாதியிடுகின்றனர். பொதுவானவைகளுக்கும் தேவனுக்கடுத்த காரியங்களுக்கும் வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது நமது கடமை.

கர்த்தருடைய பந்தியிலே பயன்படுத்தும் அப்பம் வீட்டிலே சப்பாத்தியாக செய்து சாப்பிடுகிறோம். இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்கிறோம். வீட்டிலோ அல்லது அன்றாட நடைமுறை வாழ்க்கையிலோ செயல்படுத்துவதெல்லாம் தேவனுக்கடுத்த காரியங்களாகாது. அதிலே பாவமில்லாமல் இருக்கலாம். ஆனால் அவைகளை தேவனுக்குரியது என்று நியாயப்படுத்த முடியாது. ஆகிலும் கிறிஸ்தவர்களின் பழக்க வழக்கங்கள் உடையணிதல் அநேக அன்றாட காரியங்கள் சபையின் ஆராதனையோடு மாத்திரம் முடியக்கூடிய ஒன்றல்ல. சபையின் ஆராதனையில் உள்ள கிறிஸ்தவன் எங்கிருப்பினும் கிறிஸ்தவனாக இருக்க வேண்டியவன். எனவே பொட்டு வைத்துக் கொள்ளுதலும், கண்களில் மையிட்டுக் கொள்ளுதலும் வேதத்தின்படி சரியானதுதானா? வேதமே பதிலளிக்கட்டும்.

மேற்குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள் அஞ்ஞான(விக்கிரக) வணக்கத்திற்குரியவர்களின் பழக்கமாகும். தன்னை ஒரு சுமங்கலி எனக்காட்டவும். தன் கணவனை கனப்படுத்தவும் ஒரு பெண் நெற்றித்திலகமிட்டுக் கொள்வதை அவசியம் என கருதுகிறாள். அப்பழக்கத்தில் ஊறிப்போன அப்படிப்பட்ட பெண்கள் நெற்றியில் பொட்டுவைக்காததையும் நெற்றியில் பொட்டு அழிவதையும் அமங்களமாகக் கருதுகின்றனர். இன்று பொட்டு வைத்துக் கொள்ளாமல் வாழும் எத்தனை பேர் அமங்கலியாக்கப்பட்டுள்ளனர்? சிந்திக்க வேண்டாமா? ஆகாயின் மனைவி யேசபேல் ஒரு மோசமான பெண்மணியாக வேதத்தில் கூறப்படுகிறாள். அவள் விக்கிரக ஆராதனை செய்பவளாயிருந்தாள் (1 இராஜா 16:31) கர்த்தரின் தீர்க்கதரிசிகளை கொலை செய்தவள் (1 இராஜா 18:4). தனது சுய நலத்திற்காக துணிந்து பாவஞ் செய்தவள் (1 இராஜா 19:2, 21ம் அதி) இப்படிப்பட்ட குணமுடைய ஒரு ஸ்திரீயின் அலங்காரம் மையிட்டுக் கொள்ளுதலும் ஒன்றாகும். (11 இராஜா. 9:30).

பொழுது போக்காக இவைகளை செய்கிறீர்களா? தேவனுடைய ஜனங்கள் கால்களில் கொலுசு (சிலம்பு) அணிவது முதற்கொண்டு தேவனுடைய தீர்க்கதரிசிகளால் கடிந்துகொள்ளப்பட்டது (ஏசாயா 3:16, 24) சவாலாகக் கேட்கிறேன். வேதாகம ஸ்திரீகள் யாராகிலும் எந்த ஒரு சூழ்நிலையிலாகிலும் பொட்டிட்டு கண்களுக்கு மை தீட்டியிருந்தனர் என நிரூபிக்க இயலுமா? “தேவனுடைய பிள்ளைகள் பூ வைத்துக்கொள்ளலாம்” என்று எங்கே வசனம்இருக்கிறது என்று கேட்பீர்கள். பூ வைத்துக்கொள்வது அவசியம் என்று யாரும் கூறவில்லை. ஆகிலும் பூ வைத்தலை வேத வசனத்தின் எங்காகிலும் தவறு என கண்டிக்கப்பட்டுள்ளதா? ஆனால் பொட்டு, மை இடுவதை கண்டிக்கிறதே. மேலும் ஏசாயா 55:1,2ல் “...நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்?” என்று கூறப்படுகிறது. “இந்த பிரபஞ்சத்திற்கு (உலகத்திற்கு) ஒத்த வேஷம் தரிக்க வேண்டாம்” என்று வேதம் கூறுகிறது. (ரோமர். 12:2). “எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது...” என்று பவுல் விளக்கப்படுத்துகிறார் (1 கொரி 6:11-12). “துணியினால் வடிவமைக்கப்பட்ட பொட்டு அணிவதில் தவறில்லை” என்று ஒரு சகோதரனும் தன் மனைவி ஒருமுறை கை நகத்தை பாலிஷ் பண்ண ரூ. 5 மட்டுமே செலவாகிறது. இதில் என்ன தவறு இருக்கிறது என்று மற்றொரு ஊழியக்காரரும் ஒருமுறை கூறினார்.

“நெற்றியில் பொட்டு” வைப்பதுதான் அஞ்ஞானமே தவிர, அது எவ்வகை பொருளினால் ஆனது என்பது அல்ல. ரூ. 5 செலவு செய்து கை நகங்களில் பாலிஷ் பண்ணுவது அந்த ஊழியருக்கு எளிதாக இருக்கலாம். ஆனால் ஒரு பைசா கூட செலவு பண்ணாமல் பாவம் செய்வதில் தவறில்லை என்பது போலிருக்கிறது இவரது கூற்று. தேவனுடைய ஸ்திரீகள் தகுதியான வஸ்திரம் தரிப்பதை வேதம் போதிக்கிறது. (1 தீமோ. 2:9-10; 1 பேதுரு 3:1-6). தகுதியான வஸ்திரம் தரிப்பது என்பதை உங்கள் அகராதிப்படி எப்படி விவரிப்பீர்கள்? உங்கள் நடத்தைப் பலவீனருக்கு இடறுதலாக இருக்கலாமா? (1 கொரி. 10:31-33). “பாழாய்ப்போன நீ இப்பொழுது என்ன செய்வாய்? நீ இரத்தாம்பரம் உடுத்தாலும் பொன்னாபரணங்களால் உன்னை சிங்காரித்தாலும் உன் கண்களில் மையிட்டுக் கொண்டாலும், வீணாய் உன்னை அழகுபடுத்துவாய்; சோரநாயகர் உன்னை அசட்டை பண்ணி, உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்” (எரேமி. 4:30).



## நான் யார் Who Am I ?

1. நான் கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியன் என்று அழைக்கப்பட்டவன்.
2. தீர்க்கதரிசனம் உரைத்தபின், போய், கேரீத் ஆற்றண்டையில் · ஒளித்துக் கொண்டிருக்க கர்த்தரால் எச்சரிக்கப்பட்டவன்.
3. சாறிபாத்திலுள்ள ஒரு விதவை எனக்குக் கொஞ்சம் உணவு கொடுத்தாள்.
4. இன்னொரு ஸ்தீரி என்னை அதிகமாய் வெறுத்து என்னைக் கொன்று போட ஆணையிட்டாள்.
5. என்னுடைய தீர்க்கதரிசன வாழ்நாட்களில் எண்ணற்ற அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டது.
6. ஆகாப் இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிருந்தான், யேசபேல் அவனது மனைவியாவாள்.
7. யேசபேல் அதிகமான பாகால் தீர்க்கதரிசிகளை அழைத்திருந்தாள். அவர்கள் இஸ்ரவேலரை விக்கிரகத்தைப் பின்பற்றும்படி செய்தார்கள்.
8. கர்மேல் பர்வதத்திலே பாகால் தீர்க்கத்தரிசிகளை வெட்டி போட்ட பின், நான் பயந்து என் பிராணனை காக்க ஓடிவிட்டேன்.
9. தேவதூதன் என்னை ஓரேப் மலைக்கு கொண்டு வந்தார். (சீனாய், கர்த்தர் முதல் முறையாக தன் நாமத்தை-யெகோவா என்று மோசேக்கு வெளிப்படுத்தினதும், யாத்திராகமத்தின் பிற்பகுதியில் மோசேயிடம் நியாயப் பிரமாண கட்டளையைக் கொடுத்த இடமுமாகும்). கர்த்தருக்கு முன்பாக பாவதங்களைப் பிளக்கிறதும், கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று, பூமி அதிர்ச்சி மலையை அசைத்தது, அக்கினி உண்டாயிற்று. கர்த்தர் அமர்ந்த மெல்லிய சத்தத்தில் என்னுடன் பேசினார். இங்கே உனக்கு என்ன காரியம் என்று என்னிடம் கேட்டார். இஸ்ரவேலை நடத்தும் வித்தை எனக்குக் கற்றுக்கொடுத்தார்.
10. நான் மரிக்கவில்லை ஆனால் அக்கினி ரதத்தில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவன்.

**Selected from**
**The Voice of Truth International Vol. 14**

இவன் யார்?
விடை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

MONTHLY MAGAZINE
Regd. No. 84661 - 92
Postal Regn. No. TN/DDL/19.

Edited by B. Arjunan on behalf of Church of Christ
2.2.102-D/5, Rajan Nagar, Batlagundu and Printed at Bharathi Computer Offset Press for Shanthi Printers Main Road, Batlagundu - 624202.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 9-00 மணி
வியாழன் மாலை 6-45 மணி



கிறிஸ்துவின் சபை,
2.2.102-D/5, ராஜன் நகர்,
வத்தலக்குண்டு-624202.
திண்டுக்கல் மாவட்டம்.
Phone (04543) 23278.

From
WORD OF CHRIST,
Post Box No. 5,
BATLAGUNDU - 624202.
S. India.

To